211

பதிவு எண்—M 5720 | வெள்ளிக் கிழமையில் | குருகுலத் தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 திருதலம், ... பாக்கம்; செய. கார்த்திகை, கஅ 3—12—54 தளிர் 9

11 JAN 1955

## ஆண்டவன் அருள்

உலகில் உள்ள எல்லா உயிர்களும் ஆண்டவன் அருளால் உயிர் வாழ்கின்றன ஆண்டவனால் படைக்கப்பட்ட மனிதன் மட்டும் அல்லற்பட்டு மன வேதனையுடன் வாழவேண்டிய நிலையில் உள்ளான் புட்கள் விண்ணில் விதைப்பதும் அறுப்பதும் களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதும் இல்லை மகிழ்வுடன் வாழ்கின்றன. மனிதன் மட்டும் அளவிற்குமேல் சேர்த்து வைத்து இன்று இருப்பார் நாளை இல்லை என்ற பெருமை உடைய உலகின்கண் வாழ்கின்றான்.

ஆண்டவன் அருள் என்ற ஆன்மீகத் தெய்வ சக்தியை, அவரிடமிருந்தே அடைய முடியும் அவரைத் தூய மனத்துடன் பக்தியுடன் துதி செய்தல் வேண்டும் ஆண்டவன் அருள் பெறுவதற்குப் பற்பல வழிகள் ஏட்டில் உள்ளன. ஆனால் நாம் கண்டதும் அறிந்ததும் என்ன? மார்க்கங்கள் பலவழியாயினும், அவரைப் பக்தியுடன் சேவை செய்தால், அவர் அருளை அடைந்தே தீருவோம்.

பசுக்கள் பல நிறங்களாய் இருப்பினும், அவற்றின் பால் ஒரே தூய வெண்மையான நிறம்! அதுபோன்று, மார்க்கங்கள் பல வழிகளாக இருப்பினும், ஆண்டவன் அருள் தூய்மையும் சோதியுமானது.

ஆண்டவன் அருளினை அடைவதற்கு முதன் முதலில் பக்தி மார்க்கந்தான் சிறந்தது. விடா முயற்சியுடன் ஆழ்ந்த அன்புடன் திடமான பக்தியுடன் துதி செய்தல்வேண்டும் யாவற்றிற்கும் நாள் தவறாமல் செய்யும் சாதனைதான் முக்கியம்.

பற்பல மொழிகளில் ஒரு பொருளின் பெயர் அழைக்கப்பட்டாலும், பொருள் ஒன்றுதான். மரத்தால் பற்பல சாமான்கள் செய்யப்பட்டு நாமங்கள் பல மாதிரியாக இருப்பினும், மரம் ஒன்றுதான். அதுபோல், ஆண்டவன் அருள் ஒன்றுதான்; ஒரே ஒரு கடவுள்தான் ஆண்டவனை நம்பினோர் அவன் அருளை அடைந்தே தீருவார்!

—சென்னை தா. அல்போனுசு.

## சென்னை, திருவேட்டீசுரன் பேட்டையில் குருகுலத்தார் வழிபாடு

27-11-54 மாலை 5—மணிக்குத் திருக்கோயில் மாடவீதிகளில் குருகுலத்தார் ஊர்வலம் தருமபுர ஆதீனச் சென்னைப் பிரசார நிலையத் தலைவர் சிவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமையில் கிளர்ச்சியாக நடந்தது.

7½ மணிக்குக் கோயில் வழிபாடு முடிந்தபின் சென்னைக் கல்வி நிதி அமைச்சர் திரு. C. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நிகழ்ந்தது. ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர்.

அமைச்சர் பேசுகையில், நாட்டில் பொருள் செழிப்பதனாலேயே இன்ப வாழ்வு கிட்டிவிடாது; மக்களுக்கு நன்மனம் வேண்டும்; அதற்குத் தெய்வ பக்தி வேண்டும். குருகுலத்தார் சேவை நாட்டுக்கு மிகவும் நல்லது; பெண்களும் இத் துறையில் ஊக்கமாயிருக்கின்றனர் என்றார்.

கார்ப்பொரேஷன் கவுன்சிலர்கள் திரு. ஏகாம்பரம், திரு. சுப்பிரமணியம் அவர்களும் விழாவிற் கலந்து நல்லுரைகள் வழங்கிச் சிறப்பித்தனர். பேட்டைத் திருவாளர்களான திரு. குப்புசாமி கிராமணியார், திரு சண்முகம் செட்டியார் போன்றவர்கள் இவ் விழாவிற்கான எல்லா உதவிகளையும் ஏற்றுச்செய்து நாட்டுக்கு முன் மாதிரியாய் விளங்கினர்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

7-ம் ஆண்டுக் கையொப்பம் (8-10-54 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம், மதுராந்தகம் P. O. (தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| இலை | செய, கார்த்திகை, | தளிர் |
|---|---|---|
| 7 | 3-12-54 வெள்ளி. | 9 |

# திருவள்ளுவர்

வாழ்க்கையில் அவரவர்களும் ஏதேதோ நோன்புகள் (விரதங்கள்) எடுத்துக் கொள்ளுகிறார்கள். கிருத்திகை, அமாவாசை, சஷ்டி, திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமை என்று திருவள்ளுவர் நோன்புகளைத் தெரிவிக்கிறார். திருவள்ளுவர் மேல் அன்புள்ளவர்கள் அவர் கூறும் நோன்புகளை மேற்கொள்ள வேண்டும். திருக்குறளை நாடோறும் படிப்பது என்னும் நோன்பையாவது மேற்கொள்ளுவது நல்லது. அவர் கூறும் நோன்புகளாவன—புலான் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம் நீக்கல், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை முதலியவையாகும். இம்மாதிரி விரதங்களை எடுக்கவேண்டும். இவைகளை எல்லாம் மேற்கொள்வது எளிதன்று என்றால், திருவள்ளுவர் தெரிவிக்கும் உயர்நிலையை அடைய முடியாது.

ஞாயிறு போல மேலிருந்து கூறுகிறார்:

இன்றைய உலகம் புலாலுண்பதைப் பற்றி ஏதேதோ வாதங்களைப் பேசுகிறது. சிலர் காய்கறிகளை மட்டும் உண்ணலாமா? மரஞ் செடி கொடிகளுக்கு மட்டும் உயிரில்லையா? என்கின்றனர். 'புலால்' 'ஊன்' என்று குறிப்பிடக் கூடியவைகளை உண்ணக் கூடாது என்று திருவள்ளுவர் தெரிவிக்கிறார். 'உண்ணாமை வேண்டும் புலால்' என்று ஞாயிறுபோல மேலிருந்து கொண்டு உலகத்தை நோக்கிக் கூறுகிறார். "தன்னூன் பெருக்கற்குத் தான் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்?" என்று கேட்கிறார்.

அகப்புறத் தூய்மை:

நாகரிகமான நல்வாழ்வுக்குத் தூய்மை வேண்டும். வெளித் தூய்மை மட்டும் கொண்டு என்ன பயன்? அகத் தூய்மையும் வேண்டுமல்லவா? உள்ளழுக்கு போக அவர் கூறும் வழி பொய்யாமை. கடவுள் தூயவர், அமலர், நிமலர், விமலர். அவரைச் சேர நாமும் தூயவர்களாக இருக்கவேண்டும். வெறும் புறத் தூய்மையும், பழமும் தேங்காயும் பூவும் பிறவும் கொண்டு சென்று எத்தனை முறைதான் வழிபட்டாலும் என்ன பயன்? அவன் என்ன கைக்கூலி (இலஞ்சம்)ப் பேர்வழியா? "பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு, நக்கு நிற்பான் நம்மிறை ஈசனே" என்கிறார் திருஞானசம்பந்தர். நம் புறத்தூய்மையும் பொருள்களும் கண்டு உள்ளழுக்குகளை, பொறாமை பொச்சரிப்பு முதலியவைகளை நினைத்துச் சிரிப்பானும். சிரிப்பது மட்டுமா? தக்க தண்டனையும் தருவான் அல்லவா?

யாருக்குத் தண்டனை மிகுதி:

தெய்வத்தைப்பற்றி நினைக்காதவர்களுக்குத் தண்டனை குறைவாகவே இருக்கும். நினைத்தும் பத்தனைப்போல் வேடம் பூண்டும் உள்ளழுங்குப் போகாதவர்கட்குத் தண்டனை மிகுதியாகத் தான் இருக்கும். அப்படியானல் தெய்வ சிந்தனை இல்லாமல் இருந்துவிடலாம் என்று கேட்கத் தோன்றும் தண்டனை பெற்றாலும் நாம் திருந்தி உயர வழி இருக்கிறது. தெருவில் விளையாடும் எல்லாக் குழந்தையையும் நாம் குளிப்பாட்டுவதில்லை. நம் குழந்தையைத்தான் அடித்து, திட்டிக் குளிப்பாட்டுகின்றோம். பிறகு உயர்வு நம் குழந்தைக்கே. மற்றவை தெருவில் அழுக்கில் ஆடிக் கொண்டேதான் இருக்கும். ஆகவே தெய்வ பக்தி பூண்டு ஒழுகியதுதான் நல்லது. முழுதும் முடியாவிட்டாலும் முடிந்தவரை தூய்மையாக இருக்க முயல்வோம். போலிப் பத்தர்கட்கே தண்டனை மிகுதி. உண்மையாகவே பக்தி பூண்டு ஒழுக்கம் காக்கும் உரமின்றி வழுவி விட்டால், மனந்திருந்திக் குறையிரந்து ஆண்டவனை நோக்கி அழுதால் அவன் நம்மை மன்னிப்பான். மனவுறுதி

கொடுத்துக் கடைத்தேற்றுவான்.

நோன்பின் பயன்:

திருவள்ளுவர் மேற்கூறிய நோன்புகளைக் கூறி அவற்றிற்கு மேல் ஞானம் என்னும் 'மெய்யுணர்வு' பற்றிக் கூறுகிறார். அவர்கூறும் நோன்புகளில் (விரதங்களில்) பழகினால் அவற்றின் பயனாக ஞானம் வரும் 'ஞானம்' வருவதற்கு வேறு வழியே கிடையாது அவர் சொன்னால் சொன்னதுதான். அதற்குமேல் வேறொருவர் ஒன்றும் சொல்ல முடியாது.

பொருள் தேட அவர் கூறும் பொது வழி:

பொருள் நலம் உண்டாக வேண்டுமானால் முதலில் கல்வி வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். நாட்டில் பொருளாதாரம் செம்மைப்பட விளைபொருள்களையும் செய்பொருள்களையும் (உற்பத்தியையும்) பெருக்குங்கள் என்று கிளர்ச்சி செய்கின்றனர் அரசியல் தலைவர்கள். நூற்றுக்கு எண்பதுபேர் நாட்டில் படிக்காதிருக்கிறபோது எவ்வளவு முயன்றாலும், வேறு எப்படி முயன்றாலும் 'உற்பத்தி' பெருக மாட்டா. முதலில் நாட்டு மக்களைப் படிப்பிக்க வேண்டும்.

எடிசன் போன்றோர் நிலை:

எடிசன் போன்றவர்கள் படித்தா பெரிய கண்டு பிடிப்புகளைச் செய்தனர்? படிப்புக்கும் பொருளுக்கும் தொடர்பில்லை என்று சொல்லத் தோற்றும். இயற்கை யறிவு வேறு, படிப்பறிவு வேறுதான். ஆனால் படிக்காதவர்கள் எல்லாம் எடிசனைப் போலவே கண்டுபிடிப்புகளைச் செய்துவிட முடியுமா? அவன் குப்பைகளைச் சேர்த்து வைத்துக் கொண்டிருந்தான். காரணம் இயல்பாகவே ஏதோ ஒன்று அவைகளையும் பயன்படுத்த முடியும் என்று தட்டுப்பட்டதனால்தான் இது படிப்பால் கண்டதன்று

படிப்பின் பயன்:

படிப்பு எடிசனைப் போன்ற இயற்கை உணர்வினர்க்கும் பெரிதும் உதவியாக இருக்கும். படிப்பால் இயற்கை உணர்வும் மாட்சிமைப் படும் பண்பும் வளரும். பொருள்களைத் தோற்றுவிக்கவும், தோற்றுவித்த பொருள்களை உலகெங்கும் தேவையறிந்து பரப்பவும் தொகுக்கும் செல்வத்தை நிரவவும் படிப்பு வேண்டும்; படிப்பில்லாவிட்டால் பரவலாக வேலை செய்ய முடியாது ஆகவே, அரசாங்கமும், அரசியல் கட்சிகளும், பல்வேறு இயக்கங்களும் மக்களைப்படிப்பிக்கவே தம் முதல் முயற்சிகளைச் செய்ய வேண்டும். இல்லையேல் பயனில்லை. திருவள்ளுவர் கடைப்பிடி இது.

ஒழுக்கப் படிப்பு வேண்டும்:

படிப்பது என்றால் எவ்வளவு படிப்பது? இப்பொதெல்லாம் பொதுவாகப் படிக்கப் படிக்க ஒழுக்கம் குறைகிறதே - தவிர வளர்வதாகத் தெரியவில்லை என்கிறார்கள். எவ்வளவும் படிக்கலாம். ஒழுக்கப் படிப்பு முதன்மை. இப்போது பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர்களாகி விடுகிறார்கள். அவர்கள் ஒழுக்கம் பற்றிக் கருதுவதில்லை. அவர்களுக்கும் மாணவர்கட்கும் நல்ல தொடர்பும் இல்லை. மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களுக்கிடையில் இருந்து பழகிப் படிக்கவேண்டும். இப்போது அது முடியாது என்றால் முடிந்தவரை முயல வேண்டும். பண்டைக் காலப் படிப்புமுறை இது ஒழுக்கத்தையே நாட்டமாகக் கொண்டு படிப்பது பண்டைய படிப்பு அதுதான் குருகுலப் படிப்பு அந்த ஒழுக்கப் படிப்பு முறை கட்டாயம் வேண்டும். அதற்குப் பண்டைக்கால முறையில குருகுலங்கள் அங்கங்கே அமையவேண்டும். கல்லூரிகள் உயர்நிலைப் பள்ளிகளின் தலைவர்களையாவது, வெறும் பட்டதாரிகளாகமட்டும் இல்லாமல் சான்றோர்களாகப் பார்த்து அமைக்க வேண்டும்.

யாருக்கு உணவிடுவது:

பசி என்று வருகிறவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியதுதான்; ஆனால் வேளைதோறும் இரந்துண்பதையே வேலையாகக் கொள்ளும் சோம்பேறிகளுக்கு உணவிடுவது அறமாகாது. நம் நாட்டில் அங்கங்கே 'அன்னதானங்கள்' நடைபெறுகின்றன. அவைகளிற் பெரும்பாலன ஒரு வரையறைக்கு உட்பட்டு நடக்கவில்லை அதனால் அங்கங்கே சோம்பேறிக் கூட்டங்கள் வளருகின்றன. படிக்கிறவர்கள் தொழில் பழகுகிறவர்கள் தொண்டு புரிகிறவர்களுக்கு மட்டும் உணவு என்று இருக்க வேண்டும். திருவள்ளுவர் விருந்து என்று குறிப்பிடுவது,

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

**COIMBATORE.**

காரியமாக வருகிறவர்களுக்கு உணவிடுவதைத்தான்; திருத்தணி திருக்கழுக்குன்றம், வடலூர் முதலிய இடங்களில் உணவிடுகிறார்கள். வழிபாட்டுக்கு உணவின்மை ஒரு தடையாய்விடக் கூடாது என்றே அங்கெல்லாம் உணவு ஏற்பாடுகள் இருக்கின்றன. உண்மையடியார்களுக்கு உணவு என்பது சரிதான். ஆனால் சாப்பாட்டுக்காகவே வருகிறவர்களுக்கு உணவு கொடுப்பது சரியன்று. இவற்றையெல்லாம் கருதாமல் அவ்விடங்களில் சோறிட்டால் 'புண்ணியம்' என்று ஒரு நம்பிக்கை கொண்டு அதற்காகத் தகுதி பாராமல் உணவிடுவது அவ்வளவு பாராட்டத்தக்கதன்று. சமயத் துறையில் குருட்டுத்தனம் சேர்ந்தால் கண்டிக்காமல் இருப்பார்களா? படிக்கிறவர்களுக்கு உணவு என்றுவரையறை செய்வதுதான் நல்லது. நாட்டில் அறியாமையும் குறையும்; சோம்பேறிகளும் மறைவர்.

## செல்வம் தேடத் திருவள்ளுவர் கூறும் வழிகள்:

திருக்குறள் பொருட்பால் 70 அதிகாரங்கள். கருத்துக்களைப் பல படியாகப் பிரித்துக் கூறுகிறார். ஆனால் அவர் "செய்க பொருளை" என்று மட்டும் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறாரேயன்றிச் செல்வத்தைத் தேடுவது எப்படி? என்று நேராகத் தனி அதிகாரம் வகுக்க வில்லை. 'பொருள் செயல் வகை' என்று ஒரு அதிகாரம் வைத்திருக்கிறார் அதில் அவர் பொருள் என்னென்ன செய்யும் என்று அதன் சிறப்பு வகைகளைத் தெரிவிக்கிறார். செல்வஞ் செய்பவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகளைப் பற்றி எல்லாம் விரிவாகக் கூறுகிறார். பொருள்தேட அவர் தெரிவிக்கும் பண்புகள் இக்காலத்தவர் போக்குக்கு முற்றும் மாறாக இருக்கிறது. பொருள் தேடவேண்டுமானால் படியுங்கள்; பெரியவர் துணையைக் கொள்ளுங்கள்; சிற்றினம் சேராதீர்கள்; முயற்சிகளைத் தெரிந்து செய்யுங்கள்; வலி காலம் நிலை அறிந்து செயல் மேற்கொள்ளுங்கள்; ஊக்கமாயிருங்கள்; சோம்பலை விடுங்கள் என்றெல்லாம் சொல்லுகிறார் செய்த பொருளைக் காப்பாற்ற வேண்டுமானால் தீ நட்பும் கூடாநட்பும் பகையும் கொள்ளாதீர்கள்; பெரியாரைப் பிழையாதீர்கள்; பெண்ணேவல் செய்யாதீர்கள்; பொருட் பெண்டிர், கள், சூது முதலிய பழக்கங்களைக் கொள்ளாதீர்கள் என்றெல்லாம் அறிவுரை கூறுகிறார். எண்ணிப் பார்த்தால் இப்பண்புகள் இல்லாதவர்சள் செல்வந் தேட முடியுமா? என்பதும், தேடினாலும் அது நிலைக்குமா? தக்க வழியிற் பயன் படுமா? என்பதும் தெரியும்.

## மருந்து பற்றித் திருவள்ளுவர்:

பொருட்பாலில் 'மருந்து' என்று ஒரு அதிகாரம் வைத்திருக்கிறார். ஆனால் அதில் 'மருந்தே' கூடாது என்றுதான் தெரிவிக்கிறார் நோய் வராமல் பார்த்துக் கொள்ளும் வழிகளைக் கூறுகிறார் இப்பொதெல்லாம் மருந்துகளுக்கு மிக்க விளம்பரம் இருக்கிறது ஆனால் நோய் வாராமல் இருக்க மேற்கொள்ளத்தக்க ஒழுக்கங்கள் பற்றி அவ்வளவாய்ப் 'பிரசாரம்' இல்லை. திருவள்ளுவர் வழிக்கும் இவ் வழிக்கும் உள்ள வேறுபாடு இது.

## ஊன்று கோல்:

இனி, நமக்குத் தெரிந்ததை எல்லாம் நம்மால் கடைப்பிடித்து ஒழுகிவிட முடியாது. ஒழுக முயன்றாலும் வழுவிவிட நேரும். படித்திருந்தாலும், தெரிந்திருந்தாலும், நடக்கையில் வாத் தக்கவர் ஒருவர் சொன்னால், ஓரளவு அவர் சொல்லுவதில் ஊன்றிச் செல்லமுடியும். இதைத்தான் சமய முறையில் அருளுரை அல்லது உபதேசம் என்பது. அது நாம் வழுவிப்போக நேர்கிற காலங்களில் ஊன்று கோல் போல இருந்து உதவும் திருவள்ளுவரும் "இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே ஒழுக்க முடையார் வாய்ச் சொல்" என்று குறிப்பிடுகிறார். ஆகவே சான்றோர் உரைகள் நம்முடைய ஒழுக்கத்துக்கு நன்னடக்கைக்கு வேண்டும்.

**Phone. 55034 Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்




**பட்டாடைகளுக்கும்**

**நூலாடைகளுக்கும்**

**சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# இசை உலகம்

## கவனிக்க வேண்டியவை

வித்துவான் வேலூர்
T. A. சம்பந்த மூர்த்தியார்:

1. தற்காலத்தில் இசை உலகில் பிரபலமடைவதென்பது சகஜமாகிவிட்டது. சிலர் திடீரென மேலோங்கி உடனே தாழ்ந்துவிடுகிறார்கள். அதற்குக் காரணம் கலையறிவை அடிப்படையாகக் கொள்ளாது விளம்பரம் முதலியவைகளையே பற்றிக் கொண்டதாகும்.

இசை உலகில் பிரபலமடைந்தவர்களால்தான் இசையை வளர்க்க முடியுமென்பது மிகத் தவறாகும். பிரபலமடைந்தவர்களில் எத்தனை பேர்களுக்குச் சுரப்படுத்தத் தெரியும்? எத்தனைப் பேருக்குத் தெரியாதென்பது (சுரஞான இலக்கண முறைகள் தெரியாதென்பது) ஆராய்ச்சிக்குரிய விஷயம். அந்தோ! இந்நிலையில் இசையுலகம் சென்று கொண்டிருந்தால் இசைக் கலையின் உண்மை மறந்து, போலி மிகுந்துதானே காணமுடியும்.

அதனால் விருப்பு வெறுப்பின்றி உண்மை அறிவாளிகளைக் கொண்டு இசை ஆராய்ச்சி எக்காலத்து நடைபெறுகிறதோ அக்காலத்தேதான் இசையுலகம் சிறந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

2. தற்காலத்தில் உலகம் எல்லாத் துறைகளிலும் முன்னேறிக்கொண்டே செல்கின்றது. அப்படியிருக்க இசைத் துறையில் மாத்திரம் பழைய பாட்டுகளைப் பழைய முறைப்படியே பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரே கொள்கையைக் கொண்டு புதிய கற்பனைக்கு இடமளிக்க இந்நாட்டில் பலர் மறுக்கின்றனர். இது இசைக் கலைக்கு ஏற்றமளிக்காது என்பது திண்ணம்.

3. மேலும் எல்லா நாட்டிலும் அவ்வந்நாட்டு மொழிகளில்தான் பாடல்கள் இருக்கவேண்டும். அதுதான் பொருளுணர்ந்து அனைவரும் ரசிக்க ஏதுவாயிருக்கும். அப்படியிருக்க நம் நாட்டில் மாத்திரம் பிறமொழி இசைத் துறையில் நுழைந்துகொண்டது. இவைகளையே (இக்கருத்திற்கேற்ப) ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரவர்கள், தீக்ஷிதர் கிர்த்தனைகள் "ஸமஸ்கிருத பாஷையில் எழுதப்பட்டிருப்பதால் இவை நமது நாட்டுப் பொது ஜனங்கள் ரஸானுபவத்துடன் பாடுவதற்குப் பயன்படமாட்டா" எனக் கூறியுள்ளார். மேலும் பாரதியார், பிறந்த நாள் முதற்கொண்டு மூன்று கீர்த்தனைகளையே திரும்பத் திரும்ப ஒரே பாதையாகக் கேட்டு வெறுப்படைந்த விஷயங்களையும், தமிழ் மொழியில் புதிய மெட்டுகளில் கீர்த்தனைகள் இயற்ற முயலவேண்டுமென்பதையும் வற்புறுத்தி முன்பே கூறியுள்ளார். இவ் விஷயங்களை விரிவாக "ஸ்ரீ பாரதியாரின் கட்டுரைகள்" என்னும் நூலில் "ஸங்கீத விஷயம்" தலைப்பில் அன்பர்கள் கண்டு கொள்க. இக்கருத்திற் கேற்ப நம் நாட்டிலும் ரேடியோ நிலையங்களிலும் பிறமொழிப் பாடல்களை அதிகம் கையாளாதிருக்கின் நல்லது. மேன்மேலும் இனியும் பிறமொழியில் பாடல்கள் தொடர்ந்து வருமேல் தமிழர்களுக்கு வருத்தந்தான்.

4 ஒவ்வொரு இசைக்கருவியிலும் சிற்சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன; உதாரணமாக:- வீணையில் அதிமேற்கால சங்கதிகளும், ஜலதரங்கத்தில் சவுக்கால சங்கதிகளும் வெளிப்படாததைக் கண்டு கொள்க இப்படியிருக்க ஆர்மோனியத்தை மாத்திரம் குறை கூறுவதன் காரணம் என்ன? இசைக் கருவிகளிலும் சில தனித்தனி அம்ஸங்களுள்ளன

பெருங்குளம் சீனிவாசையங்கார் அவர்கள் சிறந்த சங்கீத வித்வான். பல இசை நூல்களை இயற்றியவர், அவர் தம் "ஸங்கீதானுபவ சார ஸங்கிரஹம்" என்ற நூலில் ஆர்மோனியமும் புல்லாங்குழலும் ஒன்றேயாகும், அமைப்பில் இரண்டு துணைக் கருவிகள் என்பதில் சந்தேகமில்லையென்றும், புல்லாங்குழலிற்குக் காற்றை வாயினால் ஊதுவதாலும் ஆர்மோனியத்தில் Bellows (துருத்தியால்) காற்று தந்து விரலினால் அசைப்பதாலும் ஓசைகள் உண்டாகின்றன என்று கூறியிருக்கிறார்.

5. ரேடியோவில் அதிகம் பாடுவதற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைத்துள்ளார்கள். அதற்குச் சிலரை எத்தகுதியைக் கொண்டு பொறுக்குகின்றார்கள் என்பது தெரியவில்லை எப்படியாவது இருக்கட்டும், ஆனால் இப்பகுதியில், சிறந்த அறிஞர்களைப் பயன்படுத்திக்கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்கது. உதாரணமாக:— திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாதசுர வித்துவான் காருகுறிச்சி, ப. அருணாசலம் அவர்கள் நாதசுரத்தில் அறிவாளியாவர், அவர் தொழிலில் சிறந்தோங்கியிருக்கிறார், பொது மக்

கள் ஆதரவையும் மிகவும் பெற்றுள்ளார்; அப்படியிருந்தும் அவர் ரேடியோவில் சிறிது காலமாக வாசிக்காமலிருந்தார், காரணம் தக்க சலுகை காட்டாதது தான் என்பது தெரியவருகிறது; இதனால் அா தேசத்திலுள்ளவர்கள் இவருடைய வாசிப்பைக் கேட்கும் வாய்ப்பை இழந்துவிட நேரிடுகிறது; இதுபோன்று எத்தனையோ பேர்கள் இந்நிலையிலுள்ளனர்.

மேலும் இத் தகுதியில் சில வயது முதிர்ந்தோர்களைப் பெரும்பாலும் பயன்படுத்திக் கொண்டேயிருப்பது தகுதியன்று; காரணம், வயது சென்றபின் சரீர நடுக்கல், சற்பனையை வெளியிட முடியாமை முதலிய குறைபாடுகள் இயற்கையாகவே அமைந்துவிடுகின்றன.

6. கர்நாடக சங்கீதம் என்றால் பழமையான சங்கீதம் என்பர் சிலர், தென்னிந்தியக் கடற்கரைகளின் ஓரமாகப் பாடும் பாணியே என்பார் சிலர், கன்னட தேசத்தி (மைசூர்) லிருந்து வந்த சங்கீதம் என்பார் சிலர், தியாகய்யர், தீக்ஷிதர் போன்ற கிருதிகளில் வரும் சங்கீதமே என்பர் சிலர், தேவார திருவாசகங்களைப் பாடும் ஓதுவார் முறைகளே என்பர் சிலர், கர்நாடக மனிதன் அதாவது இந்தக் காலத்திற்கொவ்வாத மனிதனுடைய நடையென்பர் சிலர், இவ் வேறுபட்ட பெயர்களே நம் தென்னிந்திய சங்கீதத்திற்குக் கர்னடக சங்கீதம் என்ற பெயர் தகுதியன்று என்பதைத் தெளிவுறுத்துமன்றோ! அதனால் 'தென்னிந்திய சங்கீதம்' என்றே அழைப்பது சிறந்ததாகும்.

7. ஒருநாள் சென்னை "நேஷனல் பிச்சர்ஸ்" கம்பெனியில் டைரெக்டர் திரு. கிருஷ்ணன் பஞ்சு அவர்களும் P. A. பெருமாள் முதலியாரவர்களும், "நம் நாட்டுப் பாடல்களில் கவர்ச்சியூட்டத்தக்க நிலையில் நம் இசையை அமைத்துக் கொடுத்தால் ஏன் பிறநாட்டிசை (மெட்டை) நம் சினிமாத் துறையில் புகுத்துகின்றோம்? என்று கூறினார்கள்; அவ்வாறு அவர்கள் கூறியதில் தவறில்லை நம் நாட்டவர்கள் சங்கீத விஷயங்களுக்கு முதலிடம் கொடுத்தார்களே தவிர, பாவனைகளைப் பற்றியோ, பாடல்களின் உச்சரிப்பைப் பற்றியோ சிந்தித்தார்களில்லை. அதனாலேயே நம் நாட்டுப் பாடல்களின் மெட்டில் பொது மக்கள் கவர்ச்சி கொள்ளாமல் பிறநாட்டு மொழிகளையே அமைத்துக்கொண்டு பாடுவதும், ஆடுவதும், ரசிப்பதும் வழகத்தில் அதிகமாகிவிட்டது; இதற்குக் காரணங்கள் நம் நாட்டுப் பாடல்களில் பதங்களைச் சரியாய் உச்சரிக்காமையும் பாடல்களுக்குத் தகுந்த பாவனையுடன் மெட்டுகள் அமைக்காமையும் பதங்களைக் கேட்பவர்கள் புரிந்து கொள்ளாதவாறு அதிகமான சங்கீதத்தின் அசைவுகளை (கமகங்களை) அளவுமீறி உபயோகப்படுத்துதலும் ஆகும்; இக் குறைபாடு நீங்கின் நம் தென்னிந்திய சங்கீதம் உயர்ந்தோங்கும் என்பது திண்ணம்.

இக் கருத்திற் கேற்ப நமது தேச இசையில் சோக ரசமும், சிருங்கார ரசமுந்தான் நடைபெறுவதாகவும், மற்ற ஏழு ரசங்களைப் பாடல்களிலே காணவில்லை என்பதாகவும் முன்பே ஸ்ரீ பாரதியாரவர்கள் "சங்கீத விஷயம்" என்கிற கட்டுரையில் தெளிவாகத் தெரிவித்துள்ளார். இம் முறையில் நமது சங்கீதத்தில் ரசபாவனைகள் அநேகம் கையாளாமல் விட்டுவிட்டதால், பிறமொழி இசையில் பொது ஜனங்கள் ரஸிக்கின்றார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.

7. இசையை நாடகங்களுக்கேற்பத் தனித்த முறையிலும், அமைத்துக் கொள்ளல் சிறந்தது. அநேகர் பாவனைக்குத் தகுந்தவாறு ராகங்களை இனிமையாக அமைத்துக் கொள்ளுவதில்லை. இதற்குக் காரணம் சுரங்களை ஒவ்வொன்றாகத் தேடித் தேடிப் பிடித்தே பாடுவதாகும்.

9. பிற்காலத்திலே தான் பாஷாங்க ராகங்கள் அம் முறையில் இல்லை இம் முறைதான் இசை இலக்கண முறைக்கு ஒத்ததாகும்.

சென்னை ரேடியோ நிலையத்தில், மதுரை நாதசுர வித்துவான் பொன்னுச்சாமிப் பிள்ளையவர்கள் இயற்றிய "பூர்வீக சங்கீத உண்மை" என்னும் நூலின் விஷயத்தைக் குறித்தும் விமர்சனம் செய்யுங்கால் பேசப்பட்டது. பேசியவர் இசை அரசு M. M. தண்டபாணி தேசிகராவர். இவ் விமர்சனத்தில் கர்த்தா ராகம் 32 தான் என்பதை தேசிகாவர்கள் விளக்கினார்கள்.

தேவார உலகம்:—

சிதம்பரம் M. கனகசபை பிள்ளை, திருக்களர் சுந்தரேச தேசிகர், தேவகோட்டை D. சோமசுந்தர தேசிகர், தருமபுர ஆதீனத்தில் ஆசிரியராக இருந்த சுப்பிரமணிய முதலியார், ஷ்டி ஆதீனத்தில் இசைவாணராக இருக்கும் சாமிநாத முதலியார், மதுரை சுப்பையா ஓதுவார்,

சைலப்ப ஓதுவார், திருக்கடையூர் பிச்சைக் கட்டளை எஸ்டேட் தேவாரப் பாடசாலை ஆசிரியர் ரத்தினம் பிள்ளை. தேவகோட்டைக் கணேசம் பிள்ளை, பழனி பாடசாலை ஆசிரியர் நமசிவாயம், புதுவை விநாயக முதலியார், திருவாவடுதுறை வில்வலிங்கம், சபாபதி சகோதரர்கள், அம்பை சுப்பய்யா முதலியார் ஆகியவர்களும் கீழ்க் கண்டவர்களின் இசையைக் கேட்க நேர்ந்தது.

திருவண்ணாமலையில் சமீபத்தில் சிதம்பரம் கனகசபைப் பிள்ளை அவர்கள் தேவாரப் பாடல்களைப் புதுமையான ராகங்களில் இனிமையாக இசைத்தார்கள். காஞ்சிபுரத்தில் சுந்தரேச தேசிகரும் சோமசுந்தர தேசிகரும் புதிய மெட்டுகளில் (ராகங்களில்) பாடினார்கள். இவர்களுக்கு மிகவும் பொருத்தமாக முத்து நடேச அய்யர் ஆர்மோனியமும், ஆப்பிலா: என்பவரின் மிருதங்கமும் அமைந்திருந்தன. சென்னை ஏகாம்பர நாதர் திருவிழாவில் புதுவை விநாயக முதலியாரவர்களும், புண்ணிய கோட்டியும் அன்னிய ராகங்களில் பாடினது அழகாகவே இருந்தது கீர்த்தனை மெட்டுகளில் சில பாடல்களை இசைத்தது பொருத்தமாக இல்லை இது தமிழ்ப் பாட்டிற்கு இழிவைத் தேடிவைப்பது போலாகும். மயிலாப்பூரில் சுப்பிரமணிய முதலியாரும் நமசிவாயமும் ஒன்று சேர்ந்த கோஷ்டியைத்தான் பலரும் ரசித்தார்கள். மற்றொரு கோஷ்டியைக் கேட்டு ரசிப்பார் பெரும்பாலும் இல்லை.

மேற்படி தேவாரம் பாடும் இசைவாணர்களில் சிலர் அடிக்கடி மேல் பஞ்சமத்தைத் தாவிப் பாடும் சர்க்கஸ் வேலைகளில் ஈடுபடுகிறார்கள் இக் குறைபாடு நீங்கினால் கேட்பவர்கள் மிகவும் ரசிப்பார்கள்.

சங்கீத விமர்சனத்தைக் குறித்து அநேக பத்திரிகைகளில் வெளிவருகின்றன. சங்கீதத்தை எழுத்து வடிவத்தில் அடுக்கி மனதில் தோன்றியவாறெல்லாம் எழுதுவதில் பயனில்லை. சங்கீத விமர்சனம் எழுதுகிறவர்கள் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பொது ஜனங்களிடையில் இசை அரங்கு நடத்தும் தன்மை பெற்றிருக்க வேண்டும். கேவலம் விளம்பரத்திற்கென எழுதுவது ஏற்றதன்று. பொதுஜனங்களும் வித்துவான்களும் நிறைந்த அரங்கில் இரண்டு மணி நேரமாவது பாடுகிற புலமைமே இல்லாதவர்கள் எழுதுகிற விமர்சனம் பயனற்ற விமர்சனமாகும். ஏனெனில், சங்கீதம் தானே பாடி இன்புற்று அனுபவத்தைக் கொண்டு உணரவேண்டிய விஷயமாகும். இதுவரையில் பல சங்கீத விமர்சனங்களைப் பார்த்துதான் வருகின்றேன். ஒருவர் பாடிய விஷயம் ஒரேமாதிரியாகப் பத்திரிகைகளில் விமர்சிக்கப்படுவதில்லை; ஒன்றிற்கு ஒன்று முரண்பாடாகவே இருக்கின்றன. உதாரணமாக ஒருவர் ஒரு இசை அரங்கில் இரண்டு மூன்று ராகங்களை நீண்ட நேரமாகப் பாடிவிட்டாலே மறுதினம் ஒரு பத்திரிகையில் தோடிதான் ரஞ்சிதமாகப் பாடினாரென்று வெளிவரும், மற்றொரு பத்திரிகையில் சங்காபரணம்தான் ரஞ்சிதமாகப் பாடினாரென்று வெளிவரும், மற்றொன்றில் எந்த ராகங்களையும் ரஞ்சிதமாகப் பாடவில்லையென்றும் கீர்த்தனைகளைத்தான் ரஞ்சிதமாகப் பாடினாரென்றும் வெளிவரும். இப்படி ஒருவர் பாடிய விஷயத்தை ஒவ்வொரு பத்திரிகையும் ஒரே முடிவாகக் கூறாமல் பலவிதமாகக் கூறுவதில் எதைப் பொதுஜனங்கள் நம்புவது?

உதாரணமாக, நடந்தேறிய ஒரு விமர்சனத்தை இங்குக் குறிப்பிடுகிறேன். அன்பர்கள் இனிக் கவனித்துப் பார்த்தால் எனது அபிப்பிராயத்தின் உண்மை விளங்கும். 26.12-49-ல் சென்னை சங்கீத வித்வத் சபை மகாநாட்டில் ஸ்ரீமதி D. K. பட்டம்மாள் அவர்கள் கச்சேரியில் சங்கீரணஜாதி துருவ தாளத்தில் பல்லவியைப் பாடினார்கள். இதைக் குறித்து 27-12-49 அன்று "தினமணி" சங்கீத விமர்சனத்தில் திரு. E கிருஷ்ணய்யர், சங்கீரண ஜாதி மட்டிய தாளம் திஸ்ர நடை என்று எழுதிவிட்டார். மேற்படி அம்மையார் பாடிய தாளத்தின் அக்ஷரங்கள் 29 கொண்டதாகும். நமது திரு. கிருஷ்ணய்யர் "தினமணியில்" எழுதிய விமர்சனத்தில் சங்கீரண ஜாதி மட்டிய தாளமெனக் கூசாமல் குறிப்பிட்டுவிட்டார். இவர் குறித்த தாளத்தின் அக்ஷரங்கள் 20 கொண்டதாகும். மேற்படி ஸ்ரீமதி, D. K பட்டம்மாள் அவர்கள் 29 அக்ஷரங்களில் பாடியதை, திரு. E. கிருஷ்ணய்யர் 20 அக்ஷரங்களெனக் குறிப்பிட்டார். இப்படி அய்யரவர்கள் 9 அக்ஷரங்களை அடியோடு புசித்துவிட்டாரே! இவ்வாறு பெரிய மனிதர்கள் எல்லாம் விமர்சனம் எழுத ஆரம்பித்துவிட்டால் சங்கீத உலகம் என்ன கதியாகும்!

—தென்னிந்திய இசை உலகம்.

# அன்னை சாரதாமணி தேவியார்

(முன் தொடர்ச்சி)

தவறு செய்தவர்களுக்கும், தீங்கிழைத்தவர்களுக்கும் அவரிடம் தயை உண்டென்பது மட்டுமல்ல. திருடர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் அவர் காட்டிய அன்பு ஒரு விசித்திரமாகவே இருந்ததை மெய்ப்பிக்கும் வரலாறுகள் இருக்கின்றன. பெண்மையின் தனி இயல்புகளான பொறுமை, சகிப்புத் தன்மை இவைகள் நிரந்தரமான தெய்வ அம்சங்களை அவர்களிடம் அள்ளிவிடுகின்றன எனலாம். குடும்பத்தில் தாய்க்குள்ள பொறுப்பு சாமான்யமல்ல. வெளிநாடுகளில் இவ்விதம் பெண்மையைப் பூஜித்தார்களோ, தெரியவில்லை. இந்தத் தேசத்தில் தாய்மையின் வடிவமே தெய்வம் என்பதைத் தொன்றுதொட்டு நினைத்துவந்ததால், வேறு விதங்களில் போற்றுவதை விடவும், பெண் இனத்தைத் 'தாய்கள்' என்ற கௌரவத்தினால் பெரிதும் ஏற்றி விட்டார்கள்.

இக்காரணத்தினால்தான் ஜகன்மாதாவை சக்தி ஸ்வரூபிணியென்றும், அழிவற்ற பெண்மை என்றும் வழங்குவது இங்குச் சாதாரணமாகிவிட்டது. சூழ்நிலைகள் எவ்வித மாற்றமமையாமலும் பெண்மை அம்சம் என்பது உலகை உய்விக்கும் ஒரு பொருள். இக் காரணமே போலும், சாரதாமணி தேவி தன்னையே லட்சியமாகக் கருதாமல் மற்றப் பெண்கள் அவரவர் சுபாவத்துக்குத் தகுந்தவிதம் நடப்பதை வற்புறுத்தினர். மனப்பக்குவத்துக்கு அனுகுணமாயும், அவரவர் வாழும் சுற்றத்திற்கு உவந்த விதமும் அவரவர் பரிமாணம் ஏற்படுவதையே தேவியார் ஒப்புக் கொண்டு உபதேசித்தார். நிரந்தரப் பெண்மையின் இருப்பிடமாக ஒவ்வொரு பெண்ணும் தான் ஆகவேண்டுமானால் அவள் செய்ய வேண்டியது தாய்மையின் பூர்ண சக்திக்கு வசப்பட்டு, ஆணைத் தனக்குக் குறிக்கோளாக எல்லாச் செய்கைகளிலும் ஏற்றுக்கொள்ளாது, பெண்மைக்கு உரித்தானவைகளிலேயே சதா ஈடுபடுவதாம்.

கடவுளிடம் அநந்நிய பக்தியைச் செலுத்தி வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதில் என்றும் தேவியார் திளைத்த காரணத்தால் பிறருக்கும் பக்தி வாழ்க்கையையே லட்சியமாய்க் கூறிவந்தார். கடவுளை ஓர் குழந்தைக்கே ஒப்பிடுவார். குழந்தை தன் இஷ்டத்தையே செய்வதுபோல், கடவுளும் அவருக்கு அருள் யாரிடம் செலுத்துவதில் பிரீதியோ அவர்களிடமே காட்டுவார் என்பார். அருளைச் சம்பாதிப்பதிலும் எல்லோருக்கும் ஒன்றுபோல் அனுபவம் சித்திக்காது. ஒருவருக்கு என்ன செய்தாலும் கிடைக்காது, மற்றொருவருக்கு வெகு சுலபமாய்க் கிட்டும். காரணம் என்ன என்று அறிவதை விட்டுக் கடவுளை அருள்பொழிய வேண்டினால், எப்படியும் கடைத்தேற வழி பிறக்கும் என்பதே தேவியின் கடைசி கூற்று.

சித்த சுத்தியும், ஒழுக்க வாழ்க்கையும் அவசியம் என்பதைப் போதித்தார். ஜபம், ஆராதனை முதலியவைகளை அவசியம் செய்வதை அவர் விரும்பினார். பொறுமையை விடக்கூடாது என்றார். முடிவாக அவருடைய உபதேசத்தைச் சுருக்கமாய்ச் சொல்வதானால், பின் வரும் வரிகளைப் பொன்னில் பொறித்து வைத்துக் கொள்வது நலம்.

'தெய்வத்துக்காக எவன் தன் கைவசமுள்ளவைகளைத் தியாகம் செய்ய முன்வருகிறானோ அவனிடம் தெய்வம் குடிகொள்ளும். சரணாகதி செய்து கடவுளை வழிபட்டவனை விதி செய்யும் சூழ்ச்சிகளும் நெருங்க மாட்டா'

இவ்வளவு உயர்ந்த வாழ்க்கையை எல்லோராலும் பின்பற்றுவது சுலபமல்ல. ஆயினும் புண்ய பூமியான பாரதத்தில் தோன்றியவர்களுக்கு, பெண் இனம் எதற்காகப் படைக்கப்பட்டுள்ளது என்பது விளக்கம் பெறும் விதம் செய்யும் வாழ்க்கையில் ஒன்று தேவியாருடையது என்று விளங்கும் இவ்வளவு உயர்ந்த ஆன்மாக்களை ஈன்ற இத் தேசத்திலுதித்தவர்களான நாம் பெருமையடைய வழியுண்டு. சாரதாமணியைப் போன்ற பெண்மணிகள் பலரை இந்நாடு முன்காலத்தில் பெற்றிருந்தது. அப் பரம்பரை வற்றவில்லை என்பதை ருஜுப்படுத்தவே இவரும் தோன்றினார் போலும். நாமும் இவ் வாழ்க்கை லட்சியங்களை இவர்களைப்போல் கடைப்பிடிக்க முயன்றால் நற்கதி பெறுவோம் என்பதில் என்ன சந்தேகம்?

---

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்)